உளி-1 | ஓசை-77 | அக்டோபர்-2023 | திங்களிதழ்

படைப்பு

# கல்வெட்டு

கவிதை மின்னிதழ்



www.padaippu.com

அரசு பதிவெண்: 521/2018

நிறுவனர் & ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

நிர்வாகக் குழு :
சகா (சலீம் கான்)
ஜெ. ராஜா ஜெயகரன்

ஆசிரியர் குழு :
படைப்பு தேர்வுக்குழுமம்

இதழ் உருவாக்க உதவி :
ஷெண்பா
பிரபுசங்கர் க
தி.கலையரசி

வடிவமைப்பு :
முகம்மது புலவர் மீரான்

இணையதள முகவரி :
www.padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்,
கடலூர் - 607002

படைப்பு பிரைவேட் லிமிட்டட்,
#12/6, மூன்றாம் தளம்,
வெல்வோர்த் ப்ராபர்ட்டீஸ்,
7 வது தெரு , டாக்டர் சுப்பாராயன் நகர்,
கோடம்பாக்கம், சென்னை - 600 024.
admin@padaippu.com
✆91 7338897788 / 7338847788

படைப்புகள் யாவும் முகநூல் படைப்புக்குழுவிலிருந்து தேர்வுசெய்யப்பட்டவை
இந்த மின்னிதழில் தங்களது படைப்புகள் வர வேண்டுமெனில் முகநூல் படைப்பு குழுவில் இணைந்து படைப்புகளை பதிய வேண்டுகிறோம். மின்னஞ்சலில் அனுப்பப்படும் கவிதைகளை பிரசுரிக்க இயலாது.

| | |
|---|---|
| ஜெயாபுதீன் | - 4 |
| க.போ.சுருளியாண்டவர் | - 5 |
| கதிரவன் வீ | - 5 |
| மு.முபாரக் | - 6 |
| மகேஷ் சிபி | - 6 |
| ஐ.தர்மசிங் | - 7 |
| யாழ் தண்விகா | - 7 |
| பூங்கோதை கனகராஜன் | - 8 |
| செ.புனிதஜோதி | - 9 |
| அதிதி கண்ணன் | - 10 |
| க.ராஜகுமாரன் | - 10 |
| ஜே.ஜே.அனிட்டா | - 11 |
| அன்புமணிவேல் | - 12 |
| மூசா | - 13 |
| மா. காளிதாஸ் | - 14 |
| லாஸ்யா | - 15 |
| செ.ரா.கிருஷ்ண குமாரி | - 16 |
| கோ. பாரதிமோகன் | - 17 |
| மழைக்குருவி | - 18 |
| ரிஸ்கா முக்தார் | - 19 |
| பிரபுசங்கர் க | - 20 |
| சுஜாதா கண்ணன் | - 21 |
| சந்துரு ஆர்சி | - 21 |
| ம.சூர்யா திருமால் | - 22 |
| ஆ.சார்லஸ் | - 23 |
| வே.சுசீ | - 23 |
| சரண்யாசத்தியநாராயணன் | - 24 |
| மகிழினி காயத்ரி | - 25 |
| த.முருகன் | - 25 |
| இயலிசம் | - 26 |
| லக்ஷ்மி | - 26 |
| குடந்தை அனிதா | - 27 |
| ச.ஆனந்தகுமார் | - 28 |
| அ.சீனிவாசன் | - 29 |
| சீ. பாஸ்கர் | - 29 |
| மஹா பர்வீன் | - 30 |
| சுப. முத்துக்குமார் | - 31 |
| ஜேபி நீக்கிழார் | - 31 |
| தமிழ்ச்செல்வன் | - 32 |
| முகமது பாட்சா | - 33 |
| ஆகிஷா | - 33 |
| குமரன்விஜி | - 34 |
| ஏ.நஸ்புள்ளாஹ் | - 35 |
| நா.கி.பிரசாத் | - 35 |
| ஷிபா | - 36 |
| கவி ரகுமான் | - 36 |
| வேலணையூர் ரஜிந்தன் | - 37 |
| ஆத்மாஜீவ் | - 38 |
| மருதம்.ஷப.கஜலக்ஷ்மி | - 39 |
| சுசித்ரா மாரன் | - 39 |



கிழக்கும் மேற்குமாய்
நீண்டு கொதிக்கிற தெருவில்
தோலை இழுத்துக் கட்டிய
உருமி -
அம்மை அசைக்கிற
வளைகுச்சி உராய்கையில்
உர்ரூம் உர்ர்ரூமென
உறுமுகிறது.

ஆளுயரச் சவுக்கைச் சுழற்றுகிற தகப்பன்
வறுமையின் வெம்மையை
சொடீர் சொடீரென தன்
முதுகின்மீதே இசைக்கிறான்.

கணுக்காலில் சதங்கை கட்டிய
பிள்ளைக் கூத்தாடி
ஏந்திய கைகளுடன்
செருப்பற்ற பாதங்களால்
அபிநயித்தபடி சத்தமெழுப்புகிறான்.

ஒட்டி உலர்ந்து குழிந்திருக்கும்
வயிற்றுக்குள்

கூத்தாடும் பசியே,

வயிற்றின் கடவுளே,

உன்காது திறக்கத்தானே
உயிருருக
வாசிக்கிறாள் அம்மா..

► ஜெயாபுதீன்



வெயில் முகம் காட்டும்
நன்பகல் ஒன்றில்..
உச்சி வானில் மிதக்கும்
பிறையை யாரும்
கண்டுகொள்ளவில்லை.
இரவு வந்ததும்
அதை எழுதத்தான்
எத்தனை கவிஞர்கள்.

நம்மீது வெளிச்சம் விழவும்
கொஞ்சம் காத்திருப்போம்.

► க.போ.சூருளியாண்டவர்

திருடன் திருடன் என்ற குரல் கேட்டு
திரும்பி பார்த்தேன்
ஒரே எட்டில் அவனை பிடித்திருக்க முடியும் விட்டு
விட்டேன்
அவன் கைகளில் இருந்தது ஒரு உணவுப்பொட்டலம்

► கதிரவன் வீ



பாழடைந்த வீட்டுக்குள்
வந்து போகும்
பறவையொன்று
உடைத்துப்போகிறது...
நெடுநாளின் வெறுமையை!

► மு.முபாரக்

என் குடிசைக்கு
வெளிச்சம் தந்த
இதே ஓட்டைகள் தான்
இப்போது
மழையையும் தருகின்றன
இரண்டையுமே
மகிழ்ச்சியுடன் ஏந்திக் கொள்கிறேன்
என் பாத்திரங்களில்

► மகேஷ் சிபி



மறையும் சூரியன்
நிறம் மாறத்துவங்குகிறது
நீலக் கடல்...

▶ ஐ.தர்மசிங்

மகளை உறங்க வைக்கக்கூறும் கதைகளின்போது
அவளிடமும் உள்ள கதைகளைக் கூறத்
தொடங்குவாள்.
உறங்குவதுபோல்
பாவனை செய்த பொழுதுகளில்
நிஜமாக உறங்கித் தொலைத்த நாட்களும் உண்டு.
மறுநாள் அவரவர் வேலையில்
மூழ்கிக் கடந்தும் மறந்தும்
ஓடித் தொலைந்தாலும்
அவள் பேசவிருந்த கதைகள்
என் உறக்கம் கண்டு
எவ்வளவு கண்ணீர் வடித்திருக்கும்...?

▶ யாழ் தண்விகா



நிலவின் அழகைப் பேசியவர்கள்
இன்று பள்ளங்களை
விமர்சிக்கிறார்கள்

உண்மை அறியும்
சோதனையில்
உலகம் தன்னையே
வியந்து கொள்ள

இருளில் ஒளிரும் நிலவை
சூரியனிடமிருந்து கடன் வாங்கிய
வெளிச்சமெனப் பேசி விட்டு

புரிந்து கொள்ளாமல் புகழ்ந்த போதும்
அறிந்து கொண்டு
அவதானித்து

அங்கே குடியேறலாமாவென
யோசிக்கும் மனிதர்கள் பார்த்து
நிலா எப்போதும் போல
உலா போகிறது

► **பூங்கோதை கனகராஜன்**



இருவருக்கு இடையில்
ஒரு கடல் இருந்தது.

உன்னையும்
என்னையும்
ஈர்க்க
எப்போதும்
திரண்டு கொண்டிருந்தது
அதில்
ஓர் அலை.

இப்போது கடலுமில்லை
திரண்டு வரும் அலையுமில்லை

காலத்தால்
கரை ஒதுங்கிய
படகொன்று
மிதந்து கொண்டேயிருக்கிறது

► செ.புனிதஜோதி



**க**னவின் சாயமேற்றிப் பார்க்கிறேன்
அனைத்தும் உன்னிலிருந்தே தொடங்குகின்றன.
மென்னெழுத்தில் நீ நீட்டும் கரங்கள்
இறுகப் பற்றவிட முடியாத
அபத்தப் பேய்கள்
தொங்கும் கனாக்களின்
முன்னுச்சிக் காலமொன்றில்
சாகாவரமாய் பயணிக்கிறாய்
அடுமனைப் புள்ளிகளின் காலம்
இருள் விரிக்கிறது
செம்பஞ்சுக்  குழம்போடிய நட்சத்திரத்தை
இரணிய வதங்களின் பின்
பூதங்கள் தொங்குகிறது.
எப்படி எப்படியோ எழுதப்பட்டும்
தீர்வதில்லை
எரிக்கப்படாத தாபமொன்று.

▶ **அதிதி கண்ணன்**

**வ**ட்டத்திற்குள் பறக்கிறது
நொடிகளின் பறவை
பெருமர இலைகளாக
உதிர்கிறது இரவும் பகலும்

▶ **க.ராஜகுமாரன்**



எந்த உறுப்புகளை உன் விதைப்பையினின்று
கருப்பைக்கு செலுத்தினாயோ
அவைகளைத் தான் நீ
வக்கிரத்தோடு புணர்ந்திருக்கிறாய்.
முதலாடை பூட்டியது துவங்கி
அணையாடை வரை
நீ வாங்கித் தந்தது தான்.
என் தாயென எண்ணி
அதனை நீ அவிழ்த்த போது
உன் தாய் என் நினைவுக்குள் எரிந்தாள்.
எனது எத்தனையோ கண்ணீரின் பின்
அன்பாளனாய் பற்றிக்கொண்ட நீதான்
வலியில் துடித்து கதறிய போதும்
இறுக அணைத்தாய் வெறியாளனாய்.
என் மறைவிட குருதியின் பிசுபிசுப்பு
உன் மகளென உன்னுடல்
பூசியிருக்கிறது பார்.

மதுமயக்கத்தில் மதியிழந்து புரிந்த தவறு
இனியுன்னை மனிதனென்பவர்கள் தவறு.
தப்பாக பெண்ணாக பிறந்த தவறு
தப்பிப் பிழைத்தாலும் அப்பாயென்றழைத்தால் தவறு.

தண்டனைகள் போதுமென்று
சட்டம் சொல்கிறது.
இப்போதும் எங்கேயோ
என்னைப் போல் ஒருவள் கதறும் சத்தம்
ஒலித்தபடியே இருக்கிறது.

► **ஜே.ஜே.அனிட்டா**



**ப**த்திரமாய் இரு என்று
ஒரு வார்த்தையிட்டாய்..

உனக்குத் தருவதற்கென
ஒருவார்த்தையும் இல்லாது
வாயடைத்து விட்டது அது.

அன்றொரு நாள்
கைநிறைய நட்சத்திரங்களையள்ளி நாம் சோழியுருட்டி
விளையாடிய கதையை
இப்போது என் நினைவின் பக்கமாக உருட்டி
விடுகிறாய்..

நீயிட்ட இதயமனுவையே
நானின்னும் வாசித்து மீண்டபாடில்லை.

கொஞ்சம் பொறு
மெல்ல செத்துக் கொள்கிறேன்
நான்.

▶ **அன்புமணிவேல்**

# ஊரான்



**ஆ**ற்று மணலைச் சுரண்டி
வளர்ந்த
முள்ளுச் செடிகள்தான்
எங்கள் அடுப்புக்கு உணவு..

ஊரோர மலையில்
வெடிவைத்து சிதறியதில்
கிடைத்த கற்கள்தான்
வீட்டு வெளிப்பக்கச்சுவர்..

வருடத்திற்கு ஒருமுறை
சிலநொடிகள் மட்டும்
தெருவின்
ஓட்டு வீடுகளைக் கடந்து
மாடி வீடுகளுக்கு
காட்சி தரும் சாமிக்காக
அரிகண்டம்
கொடுத்துக்கொண்ட மரங்கள்..

ஊர்
தன்னை அழித்துக்கொண்டு
என்னை வளர்த்தக் கதையைச்
சொன்னபோது
ஒன்ஸ்மோர் கேட்கிறான்
மகன்..

► **மூசா**



சட்டத்துள் அடைபட்ட இந்த ஓவியத்தில் நான் எங்கோ இருக்கிறேன்.

என் வண்ணங்களில் ஒன்று
அதனுள் குழைந்துள்ளது.
இழைந்தோடும் மெல்லிய கோடு
என் கனவு தான்.
அந்தப் பிசிறுகள் வேறொன்றுமில்லை
என் மௌனமே.

பறக்கும் அந்தப் பறவை
சற்றுமுன் தான்
என் கிளையிலிருந்து நீங்கியது.

கரையோரம் வளைந்து நிற்கும் நாணல்
என் புன்னகை.
அடர்ந்த என் கருமேகத்திலிருந்து
விழும் துளியில் உவர்ப்பே இல்லை.

திரிந்த பாலைத் தவிர்த்துப்
பசியோடு சுருண்டு கிடக்கும் நாயைத் தடவிக்
கொடுப்பவருக்கு என் சாயல்.

என் இரவை வரவேற்கத்
தாம்பூலத் தட்டோடு நெருங்கும் சூரியனை
இவ்வளவு குளிர்ச்சியாக
ஒருபோதும் உணர்ந்ததில்லை.

அப்புறம் புகைத்துக் கொள்
அப்புறம் இருமிக் கொள்
கோப்பைத் தேநீரில்
இன்னும் சூடு இருக்கிறது.

செதுக்காத சிறுகுறையும் பரிபூரணமே
தேதியுடன் கையெழுத்திடு.

எனக்கான சுவர்
எனக்கான கவிதை
எனக்கான முகப்பு அட்டை தான்
என் கண்ணாடி.

என் பொருளுணர்த்தலைப் புரிந்த காலம்
புழுதியாகப் படிவது
தவம் மற்றும் வரம்.

► **மா. காளிதாஸ்**



உள்ளங்கையில் நீட்டிய
தயிர்சாதச் சிறு கவளத்தை
உண்ணும் பூனைக்குட்டியின்
சொரசொரப்பான
நாவு பட்டு குறுகுறுப்பாகி
சிரித்துக்களித்த
சிறுபிள்ளைத்தனம்!!

இரண்டு நாள் பிரிவுக்குப்பின்
மேலே விழுந்து
முகமெல்லாம் நாவால் தடவி
அன்புபாராட்டும்
நாய்குட்டியின் சேட்டைகளில்
இருவரும் ஒன்றாகிப் புரளும்
குறும்புகள்!!

உறங்குகையில் அணைத்து
விழித்திருக்கையில் விரல்களால்
அளைந்து கொண்டிருக்கும்
டெடிபியருடனான பொழுதுகள்!!!

இத்தனையும்
இப்பொழுது
மீளுறுவாக்கத்தில்....
உன்னுடனான
அணைப்புகளிலும்
கொஞ்சலிலும்
மு(மொ)த்தத்திலும் !!!!!

► **லாஸ்யா**



**வ**லசைக்கு செல்பவை
திரும்புவதில்லை என்று தெரிந்தும்
நீண்ட ஆயுளுக்காக
இறைவனை வேண்டுவதில்லை வண்ணாத்திகள்

பலநூறு மரங்கள் இருந்தாலும்
மரத்திற்கொரு கூடு வேண்டுமென
ஆசைப்படுவதில்லை பறவைகள்

இரைத்தேட கற்றுத்தந்த காரணத்திற்காக
குட்டிகளிடம் உணவு வேண்டி
நிற்பதில்லை விலங்குகள்

சிறகொன்று உதிர்ந்த பின்
அந்த சிறகுக்காக அழுது புலம்புவதில்லை பறவைகள்

குளத்தில் நீர் வற்றப்போவதை
எண்ணிக் கண்ணீர் வடிப்பதில்லை மீன்கள்

வேண்டுதலும் எதிர்பார்ப்புகளும்
இல்லாத இந்த பெரும் வாழ்வையே
உங்களிடம் வேண்டுகிறேன்.

▶ **செ.ரா.கிருஷ்ண குமாரி**

# கஸல்



சாவை ருசிக்கிற கண்களை
அவளிடம் கண்டபோதுதான் முதன்முதலில்
உயிர்த்தேன்

ஏறி இறங்கும் சுவாச மார்பை
தொட்டிலாக்கிய காதல்தான் எழுதியது
இப்படி என் விதியை

இயலவில்லைதான் நம்புவதற்கு
அஞ்சனம் தீட்டிய விழிகளில்
விஷம் கசிவதை

எனது கல்லறைக்குக் குழைத்த சாந்து
கருவறை நிறத்திலா இருக்கவேண்டும்

நஞ்சானது எப்படி
எனது கோப்பை மது

விளங்காதுபோனது இதுநாள்வரை
முத்தமிட்ட உதடுகளில் வரித்திருந்த
இறுதித் தீர்ப்பு

நீண்ட ஆயுளாம் காதலுக்கு
அகப்பட்டோருக்கோ அது அற்பம்

அர்த்தமொன்றும் இருத்தலில்
இல்லைதான் இனி
இதயம் கிழிந்த வாழ்வில்

சாவதற்கும் முன்பான
சந்தேகம் இதுதான் எனக்கு

கானல் மினுக்கும் ஆலகாலப் பனிக்குடம்
காதலை எப்படி ஈன்றது

► **கோ. பாரதிமோகன்**



யாரோ சொன்னார்கள்
காதல் என்றால் மழையில்
குடை பிடிப்பது

யாரோ சொன்னார்கள்
காதல் என்றால் மழை நின்ற பிறகும்
குடை பிடிப்பது

யாரோ சொன்னார்கள்
காதல் என்றால் மழையே வராவிடினும்
குடை பிடிப்பது

நான் சொன்னேன்
காதல் என்றால்
மழை வருவது போல
பாவித்துக் கொள்வது
அதில் குடை பிடிப்பது போல
பாவித்துக் கொள்வது
குடையினுள் காதலி இருப்பது போல
பாவித்துக் கொள்வது.

► **மழைக்குருவி**



“உன்னை நீ எப்போது மன்னிக்கப்போகிறாய்?”
கண்ணாடி முன் நின்று
அவள் தன்னைத்தானேக் கேட்டுக்கொள்கிறாள்

“உன்னை நீ எப்போது மன்னிக்கப்போகிறாய்?”

பால்யத்தின் சிறகுகளை கத்தரித்தவர்களை
மன்னித்ததுபோல
காத்திருக்கச்செய்து காணாமல் போனவர்களை
மன்னித்ததுபோல
துரோகத்தின் விதைகளை உன் வழியில்
விதைத்தவர்களை மன்னித்ததுபோல
காதல் கதைகள் பேசி கண்ணீர் தந்தவர்களை
மன்னித்ததுபோல
உடனிருப்பேனென வாக்கு தந்து பாதிவழியில்
தொலைந்தவர்ளை மன்னித்ததுபோல

“அன்பே
உன்னை நீ எப்போது மன்னிக்கப்போகிறாய்?”

காலத்தின் கரங்களில்
காயங்களை கையளித்துவிட்டு
யார் யாரையோ மன்னிக்க முடிந்த
உன்னால்
ஏன் முடிவதே இல்லை
உன்னை நீயே மன்னித்துக்கொள்ள

உன் தோல்விகளுக்கும்
தவறிய முடிவுகளுக்கும்
பலவீனங்களுக்கும்
நீயேதான் பொறுப்பெடுக்க வேண்டும்
என்றாலும்
சுய மன்னிப்பிற்கான
ஒரு சிறு காரணம்கூடவா
உனக்கில்லை

மறப்பவர்களாலும்
மன்னிப்பவர்களாலும்தானே
இன்னும்
இயங்குகிறது
இவ்வுலகம்

அதற்காகவேனும்
ஒருமுறை உன்னை நீயே
மன்னித்துக்கொள்

பின்னும்
அவள் கேட்டுக்கொண்டிருந்தாள்
“உன்னை நீ எப்போது மன்னிக்கப்போகிறாய்?”

► **ரிஸ்கா முக்தார்**



உள்ளே ஏறியவுடன்
தண்ணீர் பாட்டில் தருகிறார்கள்
நமக்கென ஒதுக்கப்பட்ட
படுக்கை இருக்கைகளில்
அமர சொல்லி மெத்தையும்
கம்பளியும் தருகிறார்கள்
தேவைக்கு ஏற்ப
வைத்துக் கொள்ளுமளவு
குளிர்சாதன வசதி
செய்திருக்கிறார்கள்
கால்களை நீட்டி
தேகத்தை சாய்த்ததும்
வளைந்து வளைந்து
நகரத் தொடங்குகிறது
ஆயிரங்களை விழுங்கிய
சொகுசு பேருந்து
திரை விலக்கப்பட்ட
சாளர இடைவெளியில்
தூரத்தில் தெரிகிறது
விளக்குகள் உமிழும்
மாநகர பிளாட்பாரத்தில்
ஒடுங்கிப்படுத்திருக்கும்
சகமானுட குடும்பம்....

► **பிரபுசங்கர் க**



உடலில் எத்தனை நிறங்களோ
உடையில் எத்தனை வண்ணங்களோ

அத்தனை பேதங்களையும்
உண்டு விட்டு
நிறமிலியாய்
கீழ் சாயும் அருவத்துக்கு
நிழலென்று பெயர்

▶ **சுஜாதா கண்ணன்**

வறண்ட நதியின் மரணம்
குறித்தே பேசுகிறார்கள்
தேங்கிய நீரில்
அசையும் இலைச்சருகு
நதி இன்னும்
உயிர்ப்புடன் இருப்பதை
உறுதி செய்கிறது.

▶ **சந்துரு ஆர்சி**



உதடுகளின் அசைவை
வார்த்தைகளால் மொழிப்பெயர்ப்பவர்களை எதுவுமே
கேட்கவில்லை என்கிறார்கள்

காலடி அதிர்வுகளாலும், நுகர்தலின்
நுண்கலையாலும் வருவது யார் என சொல்லத்
தெரிந்தவனை பார்வையற்றவன்
என்கிறார்கள்.

எதைப்பற்றியும் கவலைப்படாமல்
எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருப்பவனை
மனப்பிறழ்வு
என கூறுகின்றனர்

குறைகளை நிறைகளாக மாற்ற
தெரிந்தவன் " மனிதன் "...

அனைத்தும் இருக்கும் நாம்
அனைத்திலும் சரியாக
இருக்கிறோமா ...?

► ம.சூர்யா திருமால்

## நேராகும் கசங்கல்



**பொ**ருளாதாரத்தில்
கசங்கிப்போன வாழ்க்கையை
நேர் செய்கிறார்,
துணிகள் தேய்ப்பகக் கடை
உழைப்பாளி.

▶ **ஆ.சார்லஸ்**

**அ**டுக்கிய செங்கல்
தெளிவாய் தெரிகிறது
தாவும் அணில்

▶ **வே.சுசீ**



இவ்வளவு நாளாக
அந்த காகங்கள் கரைந்து கொண்டிருந்ததை
கேட்டதுண்டு
ரசித்ததும் கூட உண்டு...
இன்று
அதுவின் கரைதலோ ஒரு வித எரிச்சல்
கல் எரிந்துவிட்டேன்.

நான் நேசிக்கும் புறாவின்
இறகு படப்படப்பு
இன்று அவ்வளவு இம்சையாக
இருந்தது
திரும்பி பார்க்காமலேயே
வந்துவிட்டேன்.

என் கொஞ்சலுக்காக
ஓடி வரும் பூனையின்
மியாவ்...
இன்று வேண்டாமென்று
வேண்டுமென்றே
கதவடைத்துவிட்டேன்.

தேடாமல் காதில் விழுந்த
இளையராஜாவிற்கு
இன்று போல்
இதுவரை அவமரியாதை
செய்ததேயில்லை.

மகளின் அம்மாயென்ற
அழைப்பு கூட
கொஞ்சமும் ஆசுவாசமாகயில்லை.

ஒரு அதிகாலை நிராகரிப்பிற்கு தான்
எத்தனை பலம்.

► **சரண்யாசத்தியநாராயணன்**



**கு**ன்றுகளைத்தான்
மலைகள் என்று
நம்பியிருக்கிறேன்
சிறுவயதில்

பிறகொரு நாள்
கொஞ்சம் பெரியதாய்
குன்றொன்று கண்டேன்
அதன் பிறகு இன்னும் கொஞ்சம் பெரியதாய்

இப்படித்தான்
இப்போதிருக்கும்
இந்த பெரிய மலையை
வந்தடைந்திருக்கிறேன்

இன்னும்
எவ்வளவு தூரம்
இன்னும்
எவ்வளவு மலைகள்
இன்னும்
எவ்வளவு நதிகள்

► **மகிழினி காயத்ரி**

**ம**லர்களின் மீதும்
விழுகிறது
நச்சுக் குண்டுகள்!

► **த.முருகன்**



**ஏ**க்கத்தோடு பார்க்கும்
அய்யனாரின் முகத்தை மறைக்க
கதவைச் சாத்திக் கொள்கிறேன்.
சுண்ணாம்பு அப்பிய கையை
வீட்டுக்குள் கழுவுவது எப்படி என்று
கேட்கிறாள் மனைவி.
கூரை வீட்டை மாடி வீடாக மாற்ற
வேண்டிக் கொண்டது
அவளும் தான்.
அய்யனாருக்காக யாராவது வேண்டிக்கொள்ளுங்கள்.
குதிரையின் கால் உடைந்து
பல ஆண்டுகளாகி விட்டது.

▶ **இயலிசம்**

**ச**த்தங்களையே தினமும் விழுங்கும் காதுகள்
மௌனத்தை தேடுகின்றன

கணினி கோப்புகள் எழுத்துக்களை தினமும் பார்க்கும்
கண்கள்
இமைகளை மூடிக்கொள் என்கின்றன

நடந்தும் நின்றும் அமர்ந்தும் பழகிய கால்கள்
ஓய்வைக் கொடு என்கின்றன

கடமைகளைச் செய்து சோர்ந்த கைகள்
அமைதியைக் கேட்கின்றன

அனைத்தையும் கொடுத்துவிட்ட மனம் ஆழ்ந்த
நிசப்தத்தின்
நிழலில் உறங்குகின்றது

நாளையை என்ன செய்வது. . .

▶ **லக்ஷ்மி**

## பார்த்துக்கொண்டே இருக்கிறோம்



**ஷ**க்கெத்து தான் விமானத்தில்
வளைகுடா நாட்டுக்கு வந்தேன்!
10 மணி நேர வேலை
கடிகாரத்தை நான் பார்க்க!
12 மணி நேரம் என்னையே
அது பார்க்கும்
நாட்காட்டியில் நாட்களை
கழித்து கழித்து காத்திருப்பேன்!
தாய் நாட்டிலிருந்து
நடந்து வந்து கொண்டிருக்கும்
ஊர் திரும்பும் நாள். அதுவரை
ஒன்று இரண்டு மூன்று நான்கு
காகித குப்பையை கூட்டி கூட்டி
வங்கியில் அடைகாக்க,
உயிரை கருவில் விதைத்து
கடல் கடந்து வந்திருந்தேன்.
மசக்கை மனைவியை
வார்த்தையாலே தலை தடவினேன்!
கருவில் கால் பதித்த குழந்தையோ
நான் வரும் வரை
காத்திருக்க வில்லை.
மகள் பிறந்தாள்.
அதே நாளில் அப்பாவானேன்.
அப்பா பாரு அப்பா பாரு
எனக்கும் அவளுக்கும் இடையே
அலை மோதுகிறாள் இணையாள்
மகளுக்கென்ன கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டே
இருக்கிறாள்
அலைபேசி தான் அப்பா போல!!

► **குடந்தை அனிதா**



சுழலுக்குள் சிக்கிக்கொண்ட தூசியென நகர்கிறது
பயணம்..

பதியன் போட்டதென்னவோ
வாசனை பூக்களுக்காகத்தான்..
சுற்றிலும் அடர்ந்த விஷச்செடிகள்

அன்புபெருவெளியில் அடைக்கலம்
தேடியபோது..

யாக்கையை அடகு வைக்க
வானம் திறந்த மழைத்தாரையாய்..

யாமத்தில் யுக்திகளுடன் சுற்றிய
இரண்டு கால் உயிரினங்கள்..

முதலில் பொதுவில் வைத்து
இப்போது ஒதுக்கி வைக்கின்றன..

பாலையில் ஊற்றுப்பறிக்க
முயற்சித்தல் போல்..
சொந்தங்கள் தேடினால்
எல்லாம் ஆண்களாய் மாறி சிரித்தன..

மருத்துவத்திற்கு பணமில்லை..
பணமிருக்கும் போது அம்மா இல்லை..

உருவாக்கப்பட்ட பட்டத்தோடு
சுழலுக்குள் சிக்கிய தூசியென
நகர்கிறது பயணம்..

► ச.ஆனந்தகுமார்

## டிஜிட்டல் பூக்கள்



**ச**ப்தம் போட்டு
கூப்பிடும் மழையின்
அழைப்பை
நிராகரித்து
கதவையும் ஜன்னலையும்
அடைத்துக் கொள்பவன்
ஊபரில்
" மழைக்கால மேகம் ஒன்றை"
அலற விடுகிறான்!!

► **அ.சீனிவாசன்**

**இ**ரண்டுகைகள் இருப்பது
இல்லாதவர்களுக்கு அள்ளிக்கொடுக்கத்தான் என்று
சொன்னதும்
கூடுதலாக இரண்டு கைகளை
வரைகிறாள் மகள்

► **சீ. பாஸ்கர்**



அஞ்சு மணி சங்கூதுறதுக்குள்ள
மா... மானு ...
கத்த கிளம்பிடும் ...

மாடக்குழியிலயிருந்த
விளக்கெண்ணெய் சீசாவ எடுத்துக்கிட்டு
பண்ணைக்கு பத்திட்டு போகயில
பொழுதும் கூடவே சேர்ந்து விடிஞ்சிடும்...

முன்ன பின்ன வந்த
மாடுகனு
வரிசப்படி கறந்து ஊத்தி...
வழக்கமா நாங்க வீடு திரும்புனாலும்...
அம்மாச்சியோட
ஒத்தக் கொம்பு மாட்டோட கன்னுக்குட்டி மட்டும்...
வைக்கோல் கன்றா பண்ணையோட கொட்டத்து
மேலயே கெடக்கும்...

ஒத்தக் கொம்பு மாடு
பால் வத்தியும்..
செத்துப் போன கன்டு மேல பாசமா நத்திதான்
கெடந்துச்சு....

சுத்தியுள்ள சனங்கதான்
ஆளுக்கொரு ஒச்சமா சொல்ல...
பிடி கயித்த மாத்தி கொடுத்துருச்சு அம்மாச்சி...

இப்பயும்
அதே சனங்கதான்
வெறுங்காடா எதுக்கு போட்டு வச்சிருக்க...
வந்த விலைக்கு கொடுத்துடுனு வந்து நிக்குதுக...

தாத்தன பொதச்ச இடமுனு
புலம்புற அம்மாச்சிக்கு....
ஒத்தக் கொம்பு மாட்டோட
கத்தல்தான் கேட்காம போச்சு...

► மஹா பர்வீன்



இரண்டு வாக்கியங்களுக்கிடையே
நடந்துவிடுகின்றன எல்லாம்
முதல்வாக்கிய வெள்ளம்
அடுத்த வாக்கியத்தில் சேறு வெடித்துக்கிடக்கிறது
பருவமெய்தியவள் தோல் சுருங்குகிறது
வாழ்ந்த வீடு தூரம் போகிறது
சிவந்த காயத்தின் மீது பொருக்கு படர்கிறது
காதலியின் காதோரம் நரைக்கிறது
யானைகள் ஊருக்குள் வருகின்றன
மெழுகிய குழிமீது தும்பை மணக்கிறது
கோர்த்திருந்த விரல்களில் அட்சதை அரிசி
ஒரு சம்போகத்தின் வியர்வை உடைக்குள் மறைகிறது
காதல் கடிதங்கள் டெலீட் செய்யப்படுகின்றன
வளைந்த முள்நுனியில் செவுள்கள்
அசைவை நிறுத்துகின்றன
பிடித்த ஆசிரியர் நம் பெயரை மறக்கிறார்
வழியும் கண்ணீரோடு முத்தம் பரிமாறப்படுகிறது
ஒற்றையடிப்பாதையொன்று உருவாகிறது
இரு வாக்கியங்கள் கொண்ட ஓடையின்
ஒரு கரையிலிருந்து
இன்னொரு கரைக்குத் தாவித்தாவி
ஆடிக்கொண்டிருக்கிறது
காலம்.

► **சுப. முத்துக்குமார்**

இறைவனிடம் இருந்த
உண்டியலில்
நிறைவாகச் சேர்ந்தது பணம்
ஆனால்..
கடவுளின் கை
இன்னும் சுத்தமாகவே இருக்கிறது.

► **ஜேபி நீக்கிழார்**



**அ**ந்த கோழியின் கண்களை
நேருக்கு நேர் பார்த்தேன்
அதுவும்
என்னை நேருக்கு நேர் பார்த்தது
நான் வாங்கப் போகும் கறிக்காக
அது வெட்டப்படக்கூடாது என்று
நினைத்தேன்

ஆனால் அது தான்
தேர்ந்தெடுக்கப்பட்டது

அவர் கைகள் பட்டவுடன்
பயனில்லாமல் சிறகடித்தது

அதன் வாயில் நீர் ஊற்றினார்
அமைதியானது

ஒரு கூரிய கத்தியால்
அதன் கழுத்து கீறப்பட்டது

தொட்டிக்குள் வீசப்பட்டது

இன்னும் சாகவில்லை என்று
கால் அசைத்து நிரூபித்துக் கொண்டிருந்தது

பின் தோல்வியை ஏற்றுக்கொண்டு
அசைவற்று போனது

வெந்நீர் தொட்டிக்குள் வீசப்பட்டது

அதன் பின் ஒரு இயந்திரத்தில்
சுழன்று
இறகுகள் இழந்தது

வெளியில் எடுக்கப்பட்டு
அதன் வயிற்று பகுதியில்
வெட்டப்பட்டது

உள் உறுப்புக்கள் வெளியேற்றப்பட்டு
தோல் உறிக்கப்பட்டது

சிறு சிறு துண்டுகளாக
ஒரு பையில் நிறைந்து
என் கைகளுக்கு வந்தப் பின்னும்

நான் பார்த்த
அதன் கண்கள் மட்டும் இன்னும்
என் கண்களுக்குள் உயிரோடு இருக்கின்றன.

எனக்கு குற்ற உணர்ச்சி எதுவும் இல்லை

சிறுத்தொண்ட நாயனாரும்
ஆப்ரஹாமும்
பலியிடத் துணியும் முன்
அவர்களின் பிள்ளைகளின்
கண்களைப் பார்த்திருப்பார்கள் தானே.

► **தமிழ்ச்செல்வன்**



அவர்கள் முட்களின் மீது ஆடுகிறார்கள்
புற்களைக் காடெனக் கட்டமைப்பதின் 70 சதவிகிதம்
இயலாமையின் இசைக்கூட்டு.
வசனங்களைத் திருத்திவிட்ட வாய்ப்பாடுகள்
வரலாறு எழுதும் நேரம்
ஒட்டகத்தின் கூடாரம் நைந்து விட்டதென்பது கற்பனை.
அசத்தியம்
தன்னை ஆபத்பாந்தவன் என நுழைய
முயல்குட்டியை மேயும் கடுவனின்
பற்கள் அகிம்சையின் சாத்திய கட்டமைப்பு என்பது
நுண்ணிய அரசியல்.
நிழல்களைப் பிரதியெடுத்துப் பரப்பும்
செயற்கூட்டை
உடைத்து வரும் பொருண்மைகளுக்குத்தான் இனி
வானம் வசப்படும்.
பறப்பதற்கு முன் அலகுகளையும்
கூர்மையாகத் தீட்டிக் கொள்கின்றன பறவைகள்.
.

▶ **முகமது பாட்சா**

சோகமாக எழுதும் வரிகளை
நீங்கள் அவர்களின் வாழ்வியலோடு பொருத்திக்
கொள்கிறீர்கள்

அவர்கள் தன் காதலிக்கு முத்தமிட்டு கொண்டே
இரங்கல் கவிதை எழுதுபவர்கள்.

தூக்குக் கயிற்றை சரிபார்க்கும் நேரத்தில் சிறிதாய்
தூவும் மழையில்
மை நிரப்புபவர்கள்.

அனாதைத்தனத்தின் ஆழத்தில்
பூச்செடிகளை தத்தெடுப்பவர்கள்.

நீங்கள் அவர்களின் கற்பனைக்கு வடிவம் கொடுக்கும்
போது அவர்கள்
தங்கள் நிஜவாழ்வில்
நீங்கள் கனவிலும் நினைத்திடாவொன்றை
செய்து கொண்டிருப்பார்கள்....

▶ **ஆகிஷா**



**எ**ன் கவிதையின் முதல்வரிக்கு
அவளின் இசையளித்த பச்சை வனமே
பாதை

அம்மாவிடம் சொல்லிவிட்டுதான்
வந்தேன்.

ஒரு வனப் பயணம் போகிறேன்.

அவள் வருவாள்

நதியோடு உறவாடுவேன்
பூக்களை ஏந்துவேன்
பறவைகளின் மொழிகளை பேசி
பறந்து திரிவேன்

வண்ணத்துப்பூச்சி பறக்கும் உணர்வில் சொற்களை
தமிழில் சொல்லிப் பார்ப்பேன்

மலையிலிருந்து
சிறுபாதையில் காயமின்றி ஓடி விழுவேன்

என் ஒருநாளை அள்ளி மலை மீது
இழுத்து வந்த நகரத்தின் மூச்சை
பரிசோதிப்பேன்


அவளே மேகங்கள்
அதில் மலைபோல ஒளிந்து கொள்வேன்

அவள் பிரிவாள்
அழுகின்ற சிறு மழை வரும்

அவள் போகட்டும்
என் நிஜங்களிலிருந்து என்றோ போய்விட்டவள்.

► குமரன்விஜி

## மலை உச்சியை அடைதல்




இரண்டு நாட்களாக
அந்த மலை உச்சியை அடைய வேண்டுமென
மலையின் சில பகுதிகளை
சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறேன்
மலை உச்சியை அடைவது
மிக வலிமையான பணி என
விபரிக்கத் தொடங்கின
அங்கு செலவளித்த பொழுதுகள்
ஆதலால் அங்கு சுற்றித் திரிந்த
காற்றிடம் மலை உச்சியை அடைவதற்கான
யோசனையை கேட்டுக் கொண்டேன்
முன்பொருகாலத்தில்
ஒருவன் மலை ஏறிய கதையை அது விபரித்தது
இடையில் சிறிது மழை பெய்யத் தொடங்கியதும்
காற்று வீடு திரும்பிவிட்டது
நானும்தான்.

► **ஏ.நஸ்புள்ளாஹ்**

“காவிரி பற்றி
சிறுகுறிப்பு வரைக”
எனும் கேள்விக்கு,
சாக்கடைக்குள்
சிக்கிக்கொண்ட
ஜீவநதி
என  எழுத நினைத்துப் பின்
“எனக்கு அரசியல் பற்றித்
தெரியாது!” என எழுதிக்கொடுத்தது
குழந்தை!

► **நா.கி.பிரசாத்**

## கனவுகள் விற்பனைக்கு



**கா**லையில் தினமும்
என் கனவுகளை ஊதி
கட்டிக் கொள்கிறேன்....
தோள்களில் சுமந்து
கூவி விற்க்கிறேன்....
கிடைக்கும் லாபத்தில்
குடும்பமாய் கஞ்சி குடிக்கிறோம்... விற்றுத் தீர்ந்த என்
கனவுகளை எண்ணி நான் கவலைப்படவில்லை
வழமைப் போல் குடிசைக்குள்
குப்பி விளக்கை அணைத்து விட்டால் விடிய... விடிய...
வண்ண கனவுகள் காணலாம்....
அது இலவசம் தானே....

► **ஷிபா**

**பூ**க்கள் /
கூந்தலில் தெரிகின்றன /
தேனிக்கள்

நெற்றிப் பொட்டு /
இமைதிறந்ததும் தெரியும் /
கருவிழி /

உறக்கமில்லா இரவு /
நிலவின்றி தொடர்கிறது /
ஆமாவாசை

► **கவி ரகுமான்**

## மழையின் பாடல்



அடை மழையொன்று
இடைவிடாது பாடுகிறது
புரியாத ராகத்தில்!

மண் மேட்டிலும்
புல் வெளியிலும்
நேசப் பெரு வெள்ளம்!

ஆறுகள் குளங்கள்
கடல்கள் எல்லாம்
நிறை மகிழ்ச்சிக் கோலங்கள்!

நீராடும் சாலைகளில்
மழைக்கால ஓவியங்கள்!

புன்னகை எழிலாடும்
சிறு செடியின் சிற்றிலைகளில்
நீர் வண்ணச் சிதறல்கள்!

பெரும் தருவொன்று
உயிர்ப் பிடிப்பைத்
தளரவிட்டுக் கொண்டிருக்கிறது!

மாடி வீட்டின் சாளரம் வழியே
தேநீரை சுவைத்துக் கொண்டு
அழகு மழையை
ரசிக்கின்றான் ஒருவன்!

ஓலைக் குடிசைக்குள்
கூரை வழி ஒழுகும் மழையை
வெற்றுத் தேநீர்க் குவளைகளுக்குள்
ஏந்திக் கொண்டிருக்கிறாள் ஒருத்தி!

இப்போது கூறுங்கள்
இந்த மழை
என்ன ராகத்தில் பாடுகிறது?

► **வேலணையூர் ரஜிந்தன்**



புறாக்கள் உதிர்த்த சொற்களை
பொறுக்கியெடுத்து
பரணில் வைத்திருக்கிறேன்
பொக்கிஷமாக.

கிரகங்களுக்கான பெயர்களை
யார் யார் வைத்தனரோ அவர்கள்
நடுராத்திரியில் வந்து சென்றனர்
பொழுதுபோக்காக.

மொழிபெயர்க்கப்படாத கவிதைகளை
பத்திரப்படுத்தி இன்னொரு மொழியை
எழுதிப் பார்த்தேன்
எனக்குத் தெரிந்த கடவுளின்
கண்முன் நேற்று.

விடியலுக்கான இசையொன்றை
பதிவு செய்த சேவல்
இன்று காலை இறந்த சேதியை
கனவில் கேட்டு
விழித்துக் கொண்டேன்.

புறாக்களின் ஒன்பது சொற்கள்
சேவலின் பதிவில் இருப்பது கண்டு
ஆச்சரியமாக இருந்தது எனக்கு.

எல்லா கிரகங்களுக்குமான பெயர்களை
என் மொழியில் எழுதிய கவிதையில்
கடவுளின் பெயர் மட்டும்
இல்லவே இல்லை.

என்றாலும் கூட
சிரித்தபடி அணைத்துக் கொண்டார்
சிலைக்குள் அடங்காத கடவுள்.

► **ஆத்மாஜீவ்**



நீ என்னை பார்
நான் உன்னை பார்க்கிறேன்
நமக்கென்று ஒரு வானம் இருக்கிறது

அது நமக்கான மழையை
உதிர்த்த வண்ணமிருக்கின்றன

உடல் சுமந்து அலையும்
நத்தையின் நீர் வெளியில்

மாதம் மூன்று நாள்
முக்குளித்திருப்பேன்

நம் பிரபஞ்சத்தின்
நட்சத்திர சொற் சாகசங்களை
அடை காத்து வை

என் உதிர வலி நீங்கும் வரை

► **மருதம்.ஷப.கஜலக்ஷ்மி**

மிதித்து மேலேறு!
முதல் தளத்தில் நின்றவுடன்
பறந்து வந்து ஒட்டிக்கொள்ளும் பளபள காகிதங்கள்!
மினுக்கலில் கரைந்து போ!


நீ குனிந்து பார்க்கும் நாளில்
மறைந்து போயிருக்கும் படிகள்... காணாமல்
போகவில்லை!
உன் தலைக்குமேல்
மின்னேணியாய்
நிலைகொண்டிருக்கும்

ஏற முயலாதே!
உன் கால் நக்கிக்கொண்டிருக்கும்
பளபள காகிதங்கள் வழுக்கிவிடும்

அற்றகுளத்தருநீர் பறவைகள்
அடுத்த குளம் போயிருக்கும்

இனி ஏறவே முடியாத கால்கள் மட்டுமே உனது

► **சுசித்ரா மாறன்**


FILMING IN PROGRESS...
PADAIPPU
PRODUCTION
AISHWARYA DUTTA - SENDRAYAN
PRODUCTION NO:01
DIRECTED BY CHARLES RAYAPPAN
DOP MARUTHA NAYAGAM MUSIC DEV PRAKASH
EDITING TAMILARASAN CHOREOGRAPHER ABU & CHALS PRO NIKIL MURUKAN
CO PRODUCER SASIKUMAR NITHYANANTHAM
PRODUCED BY BALAJI NEDUNCHEZHIYAN
JINNA ASMI